திராவிடன்

R.T.ARASU

ஆசிரியர்: என்.வி.நடராசன்

இந்திய ஏகாதிபத்தியமே வெளியேறுக!

எங்கள் தாய்த் திருநாட்டின் உரிமையை இனியும் பறிக்காதீர்!

இங்குள்ள உமது கங்காணிகளின் பேச்சை நம்பாதீர்!

கழக வெற்றிகளைப் பாரீர்! விவேகம் பெறுவீர்!

மாற்றுக்கட்சியினரும் இத்தேர்தல் படிப்பினையை உணரவேண்டும்!

அண்மையில் நடைபெற்ற பொதுத்தேர்தல் தமிழ் நாட்டில் ஓர் திருப்புமுனையை உண்டாக்கியிருக்கிறது. திராவிட முன்னேற்றக் கழகத்தினர் ஐந்து பேர்கூட இம்முறை வெற்றிபெற முடியாது என்று ஓயாமல் ஓலமிட்டு வந்த ஊராள்வோரின் உளறலுக்குச் சரியான சவுக்கடி கொடுத்து அறிவு புகட்டும் வகையில் 52 தோழர்கள் சட்டமன்றத்திற்கும், 7 தோழர்கள் பாராளுமன்றத்திற்கும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

தமிழக சட்டமன்றத்தில் 151 பேராகவிருந்த காங்கிரசின் பலத்தை 138 ஆகக் குறைத்த மகத்தான பெருமையைத் தி. மு. கழகம் பெற்றுள்ளது. தி. மு. கழகத்தின் முன்னைய எண்ணிக்கை 15. இப்போதைய எண்ணிக்கை 52 (கழக உறுப்பினர்கள் 50. கழக ஆதரவு பெற்றவர் 2.) காங்கிரசின் முன்னைய எண்ணிக்கை 151. இப்போதைய எண்ணிக்கை 138தான்!

பாராளுமன்றத்தைப் பொறுத்த வரையிலும் முன்பு 2 உறுப்பினர்களைக்கொண்டிருந்த நமது கழகம் இப்போது 7 பேரைக்கொண்ட ஒரு குரூப் ஆக வளர்ந்திருக்கும் பெருமையைப் பெற்றிருக்கிறது.

* அதேசமயத்தில் சட்டமன்றத்தில் 4 பேராயிருந்த கம்யூனிஸ்டு கட்சி இத்தேர்தலில் 2 பேரைக் கொண்ட கட்சியாகிவிட்டது!

* இரு உறுப்பினர்களைக் கொண்டிருந்த பிரஜா-சோஷலிஸ்டு கட்சி சார்பில் ஒருவர்கூட வெற்றிபெற முடியாமல், சட்டமன்றத்தில் அப்பெயர் மறைந்துவிட்டது!

* இருவரைக் கொண்டதாயிருந்த சோஷலிஸ்டு கட்சி இப்போது ஒரே ஒரு உறுப்பினரைக் கொண்டதாக ஆகிவிட்டது!

* ஒரே ஒரு உறுப்பினரைக்கொண்டிருந்த நாம்-தமிழர் கட்சி அதையும் இழந்துவிட்டது!

* சுதந்திரா பார்வார்டு என்ற கூட்டுக் கட்சியினர்தான் முன்பு சட்டமன்றத்தின் எதிர்க்கட்சியினராக விளங்கினர். ஏறத்தாழ 21 உறுப்பினர்களைக் கொண்டதாக அக்கட்சி விளங்கிவந்தது. இத்தேர்தலில் அதன் பலமும் 6 ஆகக் குறைந்துவிட்டது!

* முன்பு சுயேச்சைகள் என்ற பேரால் இருந்த எண்ணிக்கை மிகக்குறைந்து 4 பேர் மட்டுமே சுயேச்சைகள் என்ற பேரால் இடம் பெற்றிருக்கின்றனர்.

ஆக தமிழ் நாட்டைப் பொறுத்த வரை திராவிட முன்னேற்றக் கழகம்தான் காங்கிரசின் பாசிஸ வெறித்தனத்தை வீழ்த்தும் வல்லமை வாய்ந்த எதிர்க்கட்சியாக வளர்ந்துவருகிறது என்ற உண்மையை இப்பொதுத் தேர்தல் உலகறியச் செய்திருப்பது கண்டு பெருமிதம் கொள்கிறேன்.

நமது மதிப்பிற்குரிய தலைவர் அறிஞர் அண்ணா அவர்களை வெற்றிபெற முடியாமற் செய்த தீய சக்திகள் இன்று கண்டவாறு கொக்கரிக்கலாம்! பணபலமும் அதிகார மமதையும் கொண்ட ஆளவந்தார்கள் செய்த இந்த அநீதிக்கு தமிழக மக்கள் எதிர்காலத்தில் தக்க தண்டனையை அளிக்கப்போவது உறுதி! அறிஞர் அண்ணா அவர்கள் வெற்றிபெற முடியாதவாறு தவறான வழியில், சென்று ஆசாபாசத்திற்கு உட்பட்ட யாராயிருப்பினும் அவர்கள் அத்தனை பேரும் தமிழ் நாட்டின் அரசியல் பண்பாட்டிற்கு கேட்டை விளைவித்த அவமானச் சின்னங்களாகக் கருதப்படுவார்களேயல்லாது, அவர்களை மனித குலத்தில் சேர்ந்தவர்களாக அரசியல் அறம் கொண்டோர் எவரும் கருதமாட்டார்கள்!

அறிஞர் அண்ணா அவர்களையும் அவருக்குத் துணையாய் நின்று கழகத்தில் முக்கிய பொறுப்புக்களை வகிக்கும் என்னைப்போன்ற ஒரு சில தோழர்களையும், ஆளவந்தார்கள் அவர்தம் அடிவருடிகள் ஆகியோர் ஜனநாயக விரோதமான—அநாகரீகச் செயலை மேற்கொண்டு பணபலம், அதிகார ஜபர்தஸ்து ஆகியவைகளையும் காட்டி வெற்றி பெற இயலாமற் செய்ய முடிந்ததே தவிர சட்டமன்றத்திலும் பாராளுமன்றத்திலும் கழகத்தின் எண்ணிக்கை முன்பு இருந்ததைவிட ஒன்றுக்கு நான்கு பங்காக வளர்ந்து இடம் பெறுவதைத் தடுக்கவோ அல்லது அசைக்கவோ முடியவில்லை.

கழகத் தோழர்கள் இவ்வளர்ச்சியைச் சுட்டிக்காட்டி தலைநிமிர்ந்து

என். வி. என்.

பேசலாம். ஆனால் ஆளவந்தார்களோ தலைகுனிந்து செல்ல வேண்டும்.

"காங்கிரசின் பாசீஸ வெறியை-காட்டுமிராண்டி தர்பாரை என் உயிருள்ளவரை விரட்டியடிக்கும் பணியில் தொடர்ந்து ஈடுபடுவேன் என் வாழ்நாளில் அப்பணி நிறைவேறாமல் என் மூச்சு நின்றால், எனக்குப் பின்னால் மிடுக்குடன் நிற்கும் என் சந்ததி அப்பணியைத் தொடர்ந்து இனிது நிறைவேற்றும்" என்பது கழகத்தின் முன்னோடிகளாய் விளங்கிப் பணியாற்றிவரும் ஒவ்வொருவரின் உறுதிப்பாடாகும் என்பதை காங்கிரஸ் ஆட்சிபீடத்தினருக்கு எச்சரிக்க விரும்புகிறேன். எனவே அறிஞர் அண்ணா அவர்களை அல்லது கழகத்தின் முக்கிய தோழர்களில் சிலரை சட்டமன்றத்திற்குள் நுழையவிடாமற் செய்துவிட்டோம் என்று காங்கிரஸ் ஆளவந்தார்கள் இறுமாப்பு கொள்வார்களேயானால், அவர்கள் தங்களுக்குத் தாங்களே அழிவைத் தேடிக்கொண்டார்கள் என்பதைத் தமிழக மக்கள் மிக விரைவில் தரயிருக்கும் மகத்தான பாடத்தின் மூலம் உணர்ந்துகொள்ளட்டும்.

இப்பொதுத் தேர்தலில் தி. மு. கழகத்தினர் ஐந்து பேர்கூட வெற்றி பெறமாட்டார்கள் என்று ஓலமிட்ட அமைச்சர்களையும் அவர்களைச் சார்ந்த காங்கிரஸ் முகாமினரையும் கேட்கிறேன். கழகத்தின் ஐந்து ஐம்பதாயிற்று! காங்கிரசின் 151—138 ஆகத் தேய்ந்துவிட்டது! ஓலமிட்ட அமைச்சர்கள் இதற்கு என்ன பதில் கூறப்போகிறார்கள் அவர்களது எசமானர் நேரு பண்டிதரிடம்!

சுதந்திர திராவிடநாட்டுக்கொள்கைக்கு நாட்டில் ஆதரவில்லையென்பதை இத்தேர்தலில் காட்டிவிடப்போகிறோம் என்று பீத்தித் திரிந்த முதலமைச்சர் காமராசரும் மற்ற அமைச்சர்களும் கழகத்தின் அடிப்படைக் கொள்கைக்கு நாட்டில் ஆதரவு வளர்ந்துவருவதை எடுத்துக்காட்டியுள்ள இத்தேர்தல் முடிவைக் கண்டு—மக்கள் அளித்துள்ள தீர்ப்பைக் கண்டு என்ன செய்யப்போகிறார்கள்? அவர்களுக்குக் கடுகளவாவது அரசியல் பண்பு இருக்குமானால் சட்டமன்ற உறுப்பினர் பதவிகளைத் துறக்க வேண்டும். குறைந்தபட்சம் அமைச்சர்களாகிலும் சட்டமன்றத்தில் அமருவதை மானரோஷமற்றதாகக் கருதி பொறுப்பிலிருந்து விலகிவிடவேண்டும். தமிழகத்திலுள்ள ஆளவந்தார்களிடம் அந்தப் பண்பாடு ஏது? அவர்கள்தான் ஆசாபாசங்களுக்கு அடிமையாகி அரசியல் நாகரீகத்தை அடியோடு மறந்து இப்பொதுத் தேர்தலில் ஜனநாயகத்தையே சித்திரவதை செய்திருக்கிறார்களே! எனவே தேர்தல் காலத்தில் ஆளவந்தார் மேற்கொண்ட அநீதிக்குத் தி. மு. கழகம் விரைவில் பதிலடி கொடுக்கப்போவது உறுதி!

இத்தேர்தலில் மக்கள் அளித்த தீர்ப்பிலிருந்து மாற்றுக் கட்சிகளைப் பொறுத்தவரை தி. மு. கழகத்தின் வளர்ச்சியை இப்போதாகிலும் மனமார உணர வேண்டும்.

கழகத்துடன் தேர்தல் உடன்பாடு பற்றிய பேச்சுவார்த்தைகளில் ஈடுபாடுகொண்ட கம்யூனிஸ்டு, பிரஜா சோசலிஸ்ட், சோஷலிஸ்ட் கட்சிகள் தங்கள் தங்கள் கட்சிகளின் பலத்தை மனதார உணர்ந்து நியாயமான அளவுக்கு தொகுதிகளைக் கேட்டிருந்தால் அக்கட்சிகள் தி. மு. கழகத்தின் தூய்மையான ஒத்துழைப்புடன் கூடுமான அளவு வெற்றிகளைப் பெற்றிருக்கலாம்.

(4-ம் பக்கம் பார்க்க)

தேர்தலா நடந்தது!

○

சனநாயகம், மக்கள் உரிமை, எதிர்க்கட்சி அதுவும் பலமான எதிர்க்கட்சி, அரசியல் நாகரீகம், விருப்பு, வெறுப்புகளுக்கு மக்கள் ஆட்படக்கூடாது, மக்கள் விருப்பப்படி விரும்புகின்ற வேட்பாளருக்கு வாக்களிக்கலாம், என்றெல்லாம் வாய்க்கிழிய பேசப்பட்டது பச்சைத் தமிழர் ஆட்சியில்.

காஞ்சியிலும், மற்ற பல தொகுதிகளிலும் திருப்பெரும்பூதூரிலும் நடந்ததென்ன என்பதை மக்களுக்கு விளக்கத் தேவை இல்லை. அவர்களே கண்கூடாகக் கண்ட காட்சி என்பதால். ஒரு எதிர்க்கட்சித் தலைவனை எப்படியாகிலும், எந்த முறைகெட்ட செயலைச் செய்தாகிலும் தோற்கடிக்க வேண்டுமென்ற எண்ணம் அமைச்சர்களுக்குத் தோன்றியதற்கென்ன காரணம்?

வடநாட்டு எசமானர்களுக்கு இவர்கள் கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றி வைத்துவிட்டார்களா, அப்படி என்ன வாக்குறுதி தந்தார்கள். வாக்குறுதி தரவேண்டிய நிலை ஏன் ஏற்பட்டது என்பதை நாம் மக்களுக்குச் சொல்லித் தீரவேண்டும்.

பிரிவினை சக்திகளை ஒடுக்க வேண்டும் என்றும், அதற்காக அந்தக் கட்சியை சட்டவிரோதமாக்க வேண்டுமென்றும் வடநாடு கொக்கரித்தது. ஏன்? திராவிடம் பிரிந்துபோனால் சுரண்டி உண்டு கொழுக்க முடியாதல்லவா—அதனால், அப்படி ஒரு சட்டத்தைச் செய்ய இருந்தார்கள். இந்த மானங்கெட்ட சென்னை சர்க்கார் அவர்களுக்கு தைரியமிருந்தால் செய்யச் சொல்லியிருக்க வேண்டும். செய்யாதீர்கள் என்று தடுத்தது ஏன்? தி. மு. கழகத்தின்மேல் கருணையா—ஒரு பலம் பொருந்திய எதிர்க்கட்சியை சிறையிலே தள்ளிவிட்டு பொதுத்தேர்தல் நடத்தினால் வெளிநாட்டுக்காரர்கள் காரி முகத்தில் உமிழமாட்டார்களா—அதற்குப் பயந்து தி. மு. கழகத்தினரைத் தோற்கடித்து விடுகிறோம். ஒருவர்கூட வராமல் செய்துவிடுகிறோம், என்றார்கள். ஆனால் நடந்தென்ன? 15 பேரை வரமுடியாமல் தடுத்துவிடுகிறோம் என்று கிளம்பி ஒரு பக்கத்தில் 14 பேரை வரவிடாமல் செய்து மற்றோர் பக்கத்தில் 52 பேரை வெற்றி பெறும்படி செய்து விட்டார்கள்.

வடநாட்டுக்குக் கேள்வி பிரிவினை சக்தியை ஒழிக்க முடியுமா என்பது தான். இப்போது வந்திருக்கும் இந்த 52 பேரை எண்ணும்போது வடநாட்டு வயற்றில் புயல்மோதிக் கொண்டிருக்கிறது.

பிரிவினை சக்திகள் சென்னை சட்டமன்றத்தில் மாத்திரம் வளர்ந்ததில்லை, எழுவர் டெல்லிக்கு வருகிறார்கள் என்றெண்ணும் போது பெருமூச்சு விடுகின்றார்கள். முன்பு வந்தவர்கள் இருவர் அதில் ஒருவரை இடையில் திசை மாற்றி விட்டோம். அதுவும் கோயிலென்றும் தெரியாமல் குளம் என்றும் தெரியாமல் சிங்கத்தின் குகையிலே நுழைந்தது வெளியே வரவில்லை.

காமராசர் டில்லிக்குத் தரப்போகும் பதிலென்ன இதை நாடு கூர்ந்து கவனித்துக் கொண்டிருக்கிறது.

டில்லி தலைவாயில் நுழைந்தவுடனே, என்ன என்று உறுமும் ஒரு குரல், விளக்கெண்ணைக் குடித்த முகந்தான் பதில். அதன் தலைவரைத் தோற்கடித்து விட்டேன். சட்டமன்ற உறுப்பினர்கள் 14 பேரையும் தோற்கடித்துவிட்டேன். ஆஹா என்ன தெளிவு எவ்வளவு கனிவு, எத்தகைய அரசியல் விவேகம். 4 பேர்கள் பழைய உறுப்பினர்கள் வரவில்லை. டெல்லி மக்கள் சபைக்கு முன்பிருந்த இருவரில் ஒருவர் காணவில்லை. மற்ற ஒருவர் அறுவர் துணைகொண்டு வருகிறார்.

சிந்தனைச் சிற்பி
சி. பி. சிற்றரசு

அப்படியே சட்டமன்றத்திற்குள் பழையவர்கள் வரவில்லை. புதியவர்கள் 52 பேர்கள் வந்து விட்டார்கள். அசகாய சூரரே! தேர்தல் புலியே! ராமராஜ்யத்தை ரௌடி ராஜ்யமாக்கிய ரணகளச்சூரரே! தேர்தல் என்றால் காமராசர், காமராசர் என்றால் தேர்தல் என்றல்லவா உன் சிலையை வேறு திறந்து வைத்தேன். எல்லாம் பாழ்.

தமிழர்கள் சாதுக்கள். தெரியாமல் அவர்களைத் திட்டிவிட்டேன். தக்க நேரத்தில் உமக்குச் சொல்லவேண்டிய பாடத்தைச் சொல்லி, தடவவேண்டிய கரியை உன் முகத்தில் தடவி இருக்கிறார்கள். காஞ்சிபுரத்தில் பிடித்து வைத்தாயே ஒரு திருப்பதி தீவட்டியை அந்ததீவட்டியைக் கொலுத்திப்பிடிக்க உனக்கு சுமார் 7 லட்சம் செலவாயிற்றென்று கேள்விப்படுகின்றேன்.

ஒரு தொகுதியில் 7 லட்சம் செலவு செய்து ஒருவனைக் கொண்டுவந்து விட்டால் பிரிவினை சக்தியை ஒடுக்கிவிட்டதாக அர்த்தமா? அதை நம்புகிற மடையனிடம் சொல். என்னிடம் சொல்லாதே—போ—போ! என்றுவிரட்டுவார்கள். ஆகையாலேதான் முதல்வர் டெல்லிச் செல்லவில்லை. அவர்கள் குறைந்தார்கள், நாம் வளர்ந்தோம். இதை எப்படி டில்லி எசமானர்களுக்குச் சொல்வார்.

பணம் செலவழித்தார்கள் ஆகையால் வென்றார்கள் என்றால், நீ தமிழ்நாட்டு காங்கிரஸ் கமிட்டியின் நிதிக்கணக்கு வைத்திருக்கிறாயா? என்ன செலவு, என்ன மிச்சம். ஜனவரி முதல் நாள் இருப்பென்ன? பிப்ரவரி 30ல் இருப்பென்ன? எடு உன் கணக்கை என்றுமட்டிலும் கேட்டு நிறுத்திக் கொள்ளப் போவதில்லை. அவர்கள் பணம் கொடுத்தார்கள் என்று வெட்கமில்லாமல் சொல்கின்றீரே. போலீசும் ஒற்றர்களும் என்ன செய்தார்கள். பக்தவத்சலத்துக்கு விளம்பரத் தட்டிகளைத் தூக்கிக் கொண்டு ஊர் ஊராகத் திரிந்தார்களா—உமக்காக ஒலிபெருக்கி வண்டியில் உட்கார்ந்துக்கொண்டு ஊர் முழுதும் கத்தினார்களா—யாரிடம் இந்த மூட்டையை அவிழ்த்து விடுகிறாய். நீ நடத்துகின்ற சர்க்கார் மேலிருக்கும் நம்பிக்கை நாளுக்கு நாள் குறைந்துவிட்டது என்பதை மறுக்காமல் ஒப்புக்கொள்.

உன் மாகாணத்தில்தான் தனிக்கட்சி ஒன்று, அதுவும் தனிஉரிமைக் கேட்கும் கட்சி 52 இடங்களைப் பெற்றிருக்கிறது, என்னோடு ஒட்டிக்கொண்டிருக்கிற கட்சி அகில உலகம் பேசும் கட்சி, குடியரசுக் கட்சி, எதுவுமே வேறெந்த மாகாணத்திலும் இவ்வளவு இடங்களைப் பிடித்ததில்லை.

எதிர்க்கட்சித் தலைவரை சட்டமன்றத்தில் கொண்டுவந்திருந்தாலாவது அவருடைய பெரும்பொழுது சட்டமன்றத்திலே கழிந்திருக்கும். வெளியே விட்டுவிட்டதால் ஏற்படக்கூடிய விளைவுகளை நீ எண்ணவே மறந்துவிட்டாய். நீ பேசுகின்ற கூட்டத்தில் நாலு பேர் என்றால் அவர் பேசுகின்ற கூட்டத்தில் நாலு லட்சம் பேர், இது எங்களுக்குத் தெரியாதென்று நினைத்துக்கொண்டு பிரிவினைக்காரர்களுக்கு செல்வாக்கில்லை என்று செல்லாக்காசுபோல் பேசுகிறாய். அடுத்தமுறை உன் அரியாசனமே ஆட்டங்கண்டுவிடும் போலிருக்கிறதே என்று கேட்கத் தவறமாட்டார்கள் வடவர்கள்.

காங்கிரசுக்குக் கிடைத்த இந்த வெற்றி, பண வெற்றி மட்டிலுமல்ல; அதிகாரவர்கமும் சேர்ந்துகொண்டு சில பல வட்டங்களிலே வெறியாட்டம் ஆடியிருக்கிறது. தி. மு. க. தொண்டர்களைத் திடீர் திடீர் என்று பிடித்து காவலில் வைத்துவிடுவது. ரௌடிகளுக்கெல்லாம் கதர் சட்டைப் போட்டு காலிகள்போல் திரியவிடுவது அச்சத்தை மூட்டிக் கொண்டே இருப்பது. தொண்டர்கள், எந்த நேரத்தில் என்ன நடக்குமோ என்ற பயத்திலேயே பணிகளைச் செய்துக்கொண்டிருப்பது போன்ற நிலை. போலீஸ் உயர்தர அதிகாரிகளில்சிலர்எவ்வளவுஎடுத்துச் சொல்லியும் கேளாக்காதினராய் இருந்துவிட்டது போன்ற அநியாயங்களை காலதேவி கவனித்துக்கொண்டு வருகிறாள். எதற்கும் அஞ்சாத எதையும் தாங்கும் எண்ணற்ற வீரர்களே ஐம்பதுக்கு மேற்பட்டவர்கள் வெற்றி மாலை சூடியும் அறிஞர் அண்ணா அவர்கள் வராத காரணத்தால் அந்தகாரம் சூழ்ந்திருக்கும் மனதை ஒளி மயமாக்குங்கள்! சட்டமன்ற பணிகளை செவ்வனே செய்து முடியுங்கள்; கழகத்தின் கண்ணியத்தைக் காப்பாற்றுங்கள், எதுவரினும் அஞ்சோம் என் முன்னேறுங்கள். இந்தியத் துணைக்கண்டத்திலேயே நாம் பெற்ற வெற்றியைப் போல் வேறெந்தத் தனிக் கட்சியும் பெற்றதில்லை.

⁂

'திராவிடன்'

பத்திரிகையின் விவரங்களும், மற்றும் அதன் உரிமையாளரைப் பற்றிய விவரங்களும்

—[0]—

1.	வெளியாகும் இடம்	...	சென்னை
2.	வெளியிடும் நாட்கள்	...	வாரம் ஒருமுறை (சனி)
3.	அச்சிடுவோரின் பெயர்	...	புவனேசுவரி
	இனம்	...	திராவிடர்
	முகவரி	...	சோமு அச்சகம், 163 வால்டாக்ஸ் ரோடு, சென்னை-1
4.	வெளியிடுவோரின் பெயர்	...	என். வி. நடராசன்
	இனம்	...	திராவிடர்
	முகவரி		என். வி. நடராசன், 163 வால்டாக்ஸ் ரோடு, சென்னை-1.
5.	ஆசிரியரின் பெயர்	...	என். வி. நடராசன்
	இனம்	...	திராவிடர்
	முகவரி	...	என். வி. நடராசன் 163, வால்டாக்ஸ் ரோடு, சென்னை-1.
6.	பத்திரிகையின்உரிமையாளர்களுடைய பெயர்களும், முகவரிகளும் அல்லது பத்திரிகையின் மொத்த முலதனத்தில் ஒரு சதவிகிதத்திற்கு அதிகமான பங்கு கொண்டுள்ளவர்களின் பெயரும் முகவரியும்.	...	என். வி. நடராசன் 163, வால்டாக்ஸ் ரோடு. சென்னை-1.

என் அறிவிற்கும் நம்பிக்கைக்கும் நன்கு தெரிந்தமட்டில் மேலே கொடுக்கப்பட்டுள்ள விவரங்கள் யாவும் உண்மையானவை என்று என். வி. நடராசனுகிய நான் உறுதியளிக்கின்றேன்.

3—3—62 (ஒப்பம்) **என். வி நடராசன்**

திராவிடன்

எதையுந் தாங்கும் இதயம் கொள்வோம்
எழிலார் திராவிடம் பெற்றிட உழைப்போம்

R.T. ARASU

சென்னை | 3—3—62 | சனிக்கிழமை

காமராசரின் ஒப்பாரி!

——[(*0*)]——

பொதுத்தேர்தல் முடிந்தது. காங்கிரஸ் ஆட்சியின் கொடுமையால் மக்களின் வாழ்வில் சூழ்ந்திருந்த இருளைப்போக்கி ஒளிவீசிட உதயசூரியன் உதித்துவிட்டான்! கழகம் பெற்ற வெற்றிகளைக்கண்டு தமிழக மக்கள் மட்டற்ற மகிழ்ச்சியடைந்துள்ளனர். ஆனால் காங்கிரஸ் கனம்களும் அவர்தம் அடிவருடிகளும் ஒப்பாரி வைக்கின்றனர்! அதிலும் குறிப்பாக முதலமைச்சர் காமராசர் கழக உறுப்பினர்களின் வெற்றிப்பட்டியல் நீளுவதைக்கண்டு கதறி அழுகிறார்!

காங்கிரசின் பாசீஸ வெறிக்கு விழுந்துள்ள பலமான அடியை உணர்ந்து அறிவு பெறுவதற்கு பதிலாக மடமை மலிந்த வியாக்கியானத்தில் வேறு ஈடுபட்டிருக்கிறார் காமராசர்!

சுதந்திரக் கட்சியின் உதவியால்தான் கழகம் வெற்றி பெற்றதாம்! நாட்டுப் பிரிவினைக் கொள்கையைக் கொண்ட தி. மு. கழகத்திற்கு ஆச்சாரியார் உதவி செய்யலாமா யென்று அங்கலாய்க்கிறார்! முழுப் பூசணிக்காயைச் சோற்றில் மறைக்கமுயன்ற பேர்வழியைவிட படு எத்தன் போக்கில், காமராசர் கழகத்தின் வெற்றியில் பொதிந்துள்ள அரசியல் மறுமலர்ச்சியை மறைக்கப் பார்க்கிறார்!

டெல்லியிலுள்ள தங்களின் வடநாட்டு ஏகாதிபத்ய எசமானர்கள் கழகம் பெற்ற வெற்றியையும், காங்சிரகின் எண்ணிக்கை குறைவையும் பற்றித் தட்டிக்கேட்பார்களே என்ன செய்வது என்ற நடுக்கத்தால், ஆச்சாரியாரின் கட்சியைக் காட்டித் தப்பித்துக்கொள்ளலாம் என்று காமராசர் எண்ணுகிறார் போலும்! வடநாட்டு சர்க்காரின் முதல்வர் நேரு பண்டிதர் காமராசரைப் போன்று அரசியல் ஞானமில்லாதவரா? அல்லவே!

தென்னக மக்களிடையே வளர்ந்துவரும் வடநாட்டு ஏகாதிபத்ய எதிர்ப்பு உணர்ச்சியின் பிரதிபலிப்பாகவே இப்பொதுத்தேர்தலில் மக்கள் தங்களின் தீர்ப்பை வழங்கியுள்ளனர். ஆனால் அப்படிப் பிணையை வேறு திசையில் திருப்பிவிட்டுத் தப்பித்துக்கொள்ள சுதந்திரக் கட்சியை அம்பலத்திற்கு இழுத்துவைத்து ஒப்பாரி வைக்கும் காமராசரின் பித்தலாட்டத்தைக் கண்டு ஆச்சாரியார் அவர்களே கைகொட்டி சிரிப்பார் என்பதில் ஐயமில்லை!

காஞ்சித் தொகுதியிலும். சென்னை உள்ளிட்ட மற்றும் குறிப்பிட்ட சில தொகுதிகளிலும் முதலமைச்சர் என்ற அதிகார பலத்தை வைத்துக்கொண்டு ஜனநாயகத்திற்கு முரண்பட்ட செயலில் காமராசர் ஈடுபட்டதை நாடறியும்! இதனால் அறிஞர் அண்ணா அவர்களும், மற்றும் முன்னணித் தோழர்கள் சிலரும் வெற்றி பெற முடியாமற் போனாலும் கழகத்தின் எண்ணிக்கை ஐம்பத்திரெண்டாக வளர்ந்திருப்பது கண்டு நாம் மட்டுமல்ல நாடே பெருமிதம் கொள்கிறது.

நாட்டுப் பிரிவினைக் கொள்கை கொண்ட தி. மு. கழகம் எதிர்க்கட்சியாக அமைவது காமராசருக்கு வேதனையாக யிருக்கிறதாம்!

ஆம்! கழகத் தலைவர் அண்ணா அவர்களையும், மற்ற முன்னணித் தோழர்களையும் வெற்றிபெற முடியாமற் செய்துவிட்டால் கழகம் அழிந்துவிடும் என்று எண்ணி மனக்கோட்டை கட்டிய காமராசர் தமது மந்த புத்தியை எண்ணியெண்ணிக் கதறியழுவதில் ஆச்சரியமில்லை. காமராசரின் ஒப்பாரி இதோடு முடியப் போவதில்லை. கழக சார்பில் சட்டமன்றத்திற்குச் செல்லும் உறுப்பினர்கள் அனைவரும் காங்கிரசின் ஆணவத்தை—அலங்கோல ஆட்சிமுறையைத் தட்டிக்கேட்டு அடக்கப்போகும் ஒவ்வொரு கட்டத்தையும் கண்டு காமராசர் ஒப்பாரி வைப்பது மட்டுமல்ல. ஆட்சிபீடத்தைவிட்டு ஓடப்போவதும் உறுதி!

அதுபோன்றே கழக சார்பில் பாராளுமன்றத்திற்குச் செல்லும் ஏழு தோழர்களும் தென்னக மக்களின் உள்ளக் கிடக்கையை எடுத்துக்காட்டி வடநாட்டு ஏகாதிபத்தியத்திற்கு அறிவு புகட்டும் கட்டங்களைக் கண்டு அங்குள்ள டெல்லி மூலவர்கள் தங்களது ஆதிக்கம் ஆட்டங்கண்டுவிட்டதே யென்று வேதனைப்படத்தான் போகிறார்கள்!

தி. மு. கழகம், ஏதோ தேர்தல் காலத்தில் 'சீஸன்' போல தலைக் காட்டும் கட்சியல்ல. சொல்லொன்று செயல் வேருகக் கொண்டுள்ள கட்சியல்ல! தாய்த் திருநாட்டைத் தனி உரிமையுடையதாக ஆக்கும் ஒப்பற்ற பணியை மேற்கொண்டுள்ள தோழர்களின் இணையற்ற இயக்கமாகும். அதன் தலைவர் அறிஞர் அண்ணா அவர்களின் தூய்மையான தொண்டினை அஸ்திவாரமாகக் கொண்டு வளர்ந்துவரும் மக்களின் இயக்கமாகும். எனவே அடுத்த பொதுத்தேர்தலில் கழகம் ஆளுங்கட்சியாக அமையப்போவதை எவரும் தடுக்க முடியாது. தங்களின் சொந்த ஆசாபாசங்களுக்காக வடநாட்டு ஏகாதிபத்தியத்திற்கு நம் தாய்த் திருநாட்டையும், மக்களின் வாழ்வையும் காட்டிக்கொடுத்து வாழும் காமராசர் போன்றவர்களின் துரோகத்தனத்தை அறவே முறியடித்து நாட்டில் நல்ல ஆட்சியை அமைக்கப் போவதும் உறுதி!

எனவே காமராசரின் ஒப்பாரி இதோடு நின்றுவிடப்போவதில்லை. ஐந்து ஆண்டுகள் தொடர்ந்து காங்கிரஸ் முகாம்களிலே அந்த ஒப்பாரிதான் இடம்பெறப்போகிறது.

காங்கிரஸ் கனம்களை ஆட்சிபீடத்திலிருந்து விரட்டி ஏழை—நடுத்தர மக்களின் வாழ்வில் ஒளிவீசச் செய்யும் திருப்பணியில் சட்டமன்றம், பாராளுமன்றம் ஆகியவைகளுக்குத் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ள கழகத் தோழர்கள் ஒவ்வொருவரும் கட்டுப்பாடாக, தூய்மையாக தொண்டாற்றுவார்கள் என்பதில் ஐயமில்லை.

வருக! வருக!

நமது பணி வெல்க!

——(*)——

கழக சார்பில் சட்டமன்றத்திற்கும், பாராளுமன்றத்திற்கும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள அருமைத் தோழர்களே, உங்கள் வரவு நல்வரவாகுக! ஏழை—நடுத்தர மக்களின் வாழ்வு வளம் பெறவும், நம் திராவிடம் தனிஉரிமை பெற்று வாழவும் சட்டமன்றம், பாராளு மன்றம் ஆகியவைகளில் நீங்கள் ஆற்றயிருக்கும் அரும்பணி வெல்க! அதற்கு நமது மதிப்பிற்குரிய தலைவர் அறிஞர் அண்ணா அவர்களின எடுத்துக்காட்டுகள் பெருந்துணையாய் அமைவதாகுக!

உங்கள் அனைவருக்கும் நமது மனப்பூர்வமான பாராட்டுதல் உரித்தாகுக!

அன்பன்

என். வி. என்.

டெல்லி

தேவதைகளுக்குத் தலைவலி!

——[∴]——

தமிழக சட்டமன்றத்திற்கு 52 தி. மு. க. உறுப்பினர்களும் பாராளுமன்றத்திற்கு 7 உறுப்பினர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பதைக் கண்டும், அதே சமயத்தில் காங்கிரசின் பலம் குறைந்திருப்பதைக் கண்டும் டெல்லியிலுள்ள காங்கிரஸ் மூலவர்களுக்குத் தலைவலி கண்டிருக்கிறதாம்.

தனிநாட்டு உரிமைக்குத் தமிழ்நாட்டில் ஆதரவில்லையென்று தங்களிடம் கூறிவந்த காமராசர் — சுப்ரமண்யம் — பக்தவத்சலம் போன்றவர்களின் பேச்சு அனைத்தும் அரசியல் விவேகமற்றதும் ஏமாற்றத்தனமும் ஆகும் என்று டெல்லி மூலவர்கள் உறுமிக்கொண்டிருக்கிறார்களாம்!

தேர்தல் வேலையில் காமராசர் மகாசூரர் என்று தம்பட்டம் அடித்துவந்தார்களே அதுவும் பிசுபிசுத்துவிட்டதேயென்று நேற்று டெல்லியில் கூடிய காங்கிரஸ் பார்லிமெண்டரி கமிட்டிக்கூட்டத்தில் பேசப்பட்டதாம்!

மூக்கறுபட்ட முதலமைச்சரே கேளும்!

சுதந்திரக் கட்சியின் உதவியால் தி. மு. கழகம் அதிக இடங்களைப் பிடித்ததாகக்கூறி உமது கட்சியின் தோல்வியை மறைக்கப் பார்க்கிறீர்! சுதந்திரா—கம்யூனிஸ்டு—சோஷலிஸ்டு கட்சிகள் தங்கள் தங்கள் கட்சிகளின் உண்மையான நிலையை உணர்ந்து கழகத்துடன் பொதுவான உடன்பாட்டுக்கு வந்திருந்தால் கொடுமைமிக்க காங்கிரஸ் ஆட்சியே கவிழ்ந்திருக்கும்!

இந்த உண்மையை தமிழக மக்கள் நன்கு அறிவர்!

திருமதி. சதானந்தவதி மறைவு

நமது அருமைத் தோழரும், கழக பொதுக்குழு உறுப்பினரும் புரட்சி நடிகருமான எம். ஜி. ஆர். அவர்களின் துணைவியார் திருமதி. சதானந்தவதி அம்மையார் 25—2—62 காலை இயற்கையெய்திய செய்திகேட்டு சென்னை மாநகரமே துக்கத்திலாழ்ந்தது. பல்லாயிரக் கணக்கான ஆண்களும் தாய்மார்களும், எம். ஜி. ஆர். இல்லத்தின் முன் கூடி கண்ணீர்விட்டுக் கலங்கினர். அறிஞர் அண்ணா அவர்கள் உள்பட கழகத் தலைவர்கள், தோழர்கள், திரைப்படத் துறையினர் ஆகிய அனைவரும் வந்திருந்து எம். ஜி. ஆர். அவர்களுக்கு ஆறுதல் கூறினர். அன்று பிற்பகல் 1.30 மணிக்கு மயிலை இடுகாட்டில் சவம் எரியூட்டப்பட்டது.

அம்மையாரின் பிரிவால் துயருறும் புரட்சிநடிகர் அவர்கட்கும் அவர்தம் குடும்பத்தாருக்கும் நமது ஆழ்ந்த அனுதாபத்தையும் ஆறுதலையும் தெரிவித்துக்கொள்கிறோம்.

வடவர் ஏகாதிபத்தியத்திற்கு அறைகூவல்!

சுதந்திர திராவிடத்திற்கு மக்களின் பேராதரவு
சட்டமன்றத் தேர்தலில்
கழகம் பெற்ற மகத்தான வெற்றி

——(0)——

சென்னை மாவட்டம்

1. திருவல்லிக்கேணி	...	இரா. நெடுஞ்செழியன் எம். ஏ.
2. ஆயிரம்விளக்கு	...	கே. எ. மதியழகன் பி. ஏ.
3. மைலாப்பூர்	...	அரங்கண்ணல்
4. தியாகராயநகர்	...	காஞ்சி மணிமொழியார்

செங்கற்பட்டு மாவட்டம்

1. செங்கற்பட்டு	...	செ. கோ. விசுவநாதன்
2. சைதை	...	முனு. ஆதி எம்.சி.

வட ஆற்காடு மாவட்டம்

1. அரக்கோணம்	...	எஸ் ஜெ. ராமசாமி
2. செய்யாறு	...	புலவர் கோவிந்தன்
3. வந்தவாசி	...	எஸ். முத்துலிங்கம்
4. ஆற்காடு	...	முனிரத்தினம்
5. இராணிப்பேட்டை	...	அப்துல் கலீல்
6. விரிஞ்சிபுரம்	...	சம்பங்கி எம்.சி.
7. வாணியம்பாடி	...	எம். பி. வடிவேல்
8. திருப்பத்தூர்	...	கே. திருப்பதி
9. செங்கம்	...	சி. கே. சின்னராசு
10. போளூர்	...	கேசவன்
11. துரிஞ்சாபுரம்	...	எஸ். முருகையன் எம். சி.

தென் ஆற்காடு மாவட்டம்

1. திண்டிவனம்	...	ஆ. தங்கவேல் எம். சி.
2. வானூர்	...	எ. ஜி. பாலகிருஷ்ணன்
3. விழுப்புரம்	...	எம். சண்முகம் எம். சி.
4. நெல்லிக்குப்பம்	...	வி. கிருஷ்ணமூர்த்தி எம்.எ., பி.எல்
5. குறிஞ்சிப்பாடி	...	எம். இராசாங்கம்
6. காட்டுமன்னார்கோயில்	...	எம். ஆர். கிருஷ்ணமூர்த்தி
7. கள்ளக்குறிச்சி	...	டி. சின்னசாமி

சேலம் மாவட்டம்

1. அரூர்	...	சி. மாணிக்கம்
2. ஊத்தங்கரை	...	எம். கமலநாதன்
3. கிருஷ்ணகிரி	...	பி. வி. சீராமுலு
4. பொன்னுகரம்	...	கரிவேங்கடம் பி.எ.பி.எல்.
5. வீரபாண்டி	...	எஸ். ஆறுமுகம்
6. இராசிபுரம்	...	செங்கோட்டுவேல்
7. சேந்தமங்கலம்	...	வி. ஆர். பெரியண்ணன்
8. கபிலர்மலை	...	சி. வி. வேலப்பன்
9. மல்லசமுத்திரம்	...	ஆர். நல்லமுத்து

தஞ்சை மாவட்டம்

1. தஞ்சாவூர்	...	மு. கருணாநிதி
2. ஆடுதுறை	...	கோ. சி. மணி
3. பட்டுக்கோட்டை	...	வி. அருணாசலம்
4. அறந்தாங்கி	...	எ. துரையரசன்

திருச்சி மாவட்டம்

1. ஆலங்குடி	...	பி. முருகையன்
2. புதுக்கோட்டை	...	எ. தியாகராசன்
3. திருச்சி-1	...	எம். எஸ். மணி
4. பெரம்பலூர்	...	டி. பி. அழகமுத்து
5. வெங்கலம்	...	எஸ். சி. மணி
6. லால்குடி	...	எ. பி. தருமலிங்கம்
7. அரியலூர்	...	ஆர். நாராயணன்
8. ஜெயங்கொண்டம்	...	ஜெகதாம்பாள் வேலாயுதம்
9. T. பழூர்	...	எஸ். இராமசாமி

மதுரை மாவட்டம்

1. உத்தமபாளையம்	...	எம். இராசாங்கம்
2. தேனி	...	எஸ். எஸ். இராசேந்திரன்
3. ஆத்தூர்	...	வி. எஸ். எஸ். மணி

இராமநாதபுரம் மாவட்டம்

1. திருக்கோட்டியூர்	...	எஸ். மாதவன் பி.காம்.

கழக ஆதரவு பெற்றவர்கள்

1. பழனி	...	வெங்கிடுசாமி
2. திருத்தணி	...	சீராமுலு

இந்திய ஏகாதிபத்தியமே!
இதோ எங்கள் படை!

பாராளுமன்றத் தேர்தலில் கழகத்தின் வெற்றி

அன்று 2 இன்று 7

1. தென்சென்னை	...	நாஞ்சில் கி. மனோகரன் எம். எ.
2. பெரம்பலூர்	...	இரா. செழியன் எம். எ.
3. கிருஷ்ணகிரி	...	க. இராசாராம் பி. எ.
4. திருவண்ணாமலை	...	இரா. தருமலிங்கம்
5. கடலூர்	...	இராமபத்திரன்
6. திருப்பத்தூர்	...	அரூர் முத்து
7. திருப்பெரும்புதூர்	...	சிவசங்கரன் (முன்னாள் மேயர்)

எங்கள் தாயகத்தை நாங்களே ஆளுவோம்!

இதோ அதற்கு முதல் எச்சரிக்கை!

1-ம் பக்கத் தொடர்ச்சி

ஆனால் கழக வளர்ச்சி கண்டு பொறாமைக் கொண்ட அக்கட்சிகள் தங்களுக்குத் தாங்களே படுதோல்வியைத் தேடிக் கொண்டன. இந்நிலை கண்டு பெரிதும் வருந்துகிறேன். எதிர்காலத்திலாகிலும் இக்கட்சிகள் பிரதியட்ச நிலையை உணர்ந்து நடக்கவேண்டும்.

அதிலும் குறிப்பாக தேர்தல் உடன்பாடு நிறைவேறவில்லையென்றதும், கம்யூனிஸ்டு—தி. மு. க. போட்டியில்லாத தொகுதிகளில்கூட குறிப்பாக அறிஞர் அண்ணா அவர்கள் போட்டியிட்ட காஞ்சியிலும், மற்றும் சென்னை மாநகரிலும். கம்யூனிஸ்டுகள் காங்கிரசைப் பகிரங்கமாக ஆதரித்தது நாடறியும். இந்தத் துரோகபுத்தி கம்யூனிஸ்டுகளை விட்டுப் போகாத வரையில் தமிழகத்தில் கம்யூனிஸ்டு கட்சி தலைதூக்க முடியாது என்பதை இனியாகிலும் அக்கட்சியின் மூலவர்கள் உணரவேண்டும்.

சாதாரண காலங்களில் சகோதர கட்சி என்று தி. மு. க. வின் தோள்மீது கைபோட்டுக்கொண்டு சர்வகட்சி மேடைகளை அமைக்க வற்புறுத்தும் கம்யூனிஸ்டு கட்சி, தேர்தல் சமயத்தில் தேர்தல் உடன்பாடு ஏற்படவில்லையென்பதற்காக கம்யூனிஸ்டு—தி. மு. க. போட்டியில்லாத இடங்களிலும் நாட்டின் பொது எதிரியான காங்ரஸ் பாசிஸ வெறிக்குக் குனிந்து கொடுப்பதென்றால், மற்ற காலங்களில் இக்கம்யூனிஸ்டுகளை கழகத்தவர்களோ அல்லது பொது மக்களோ எப்படி நம்பமுடியும்? எனவே தமிழ்நாட்டுக்கம்யூனிஸ்டுகள் இத்தேர்தலில் நடந்த பிற்போக்குத்தனத்திற்கு இத்தேர்தலோடாவது முற்றுப்புள்ளி வைத்துக்கொள்ளவேண்டும்.

சுதந்திரா கட்சியைப் பொறுத்தவரை அதன் தலைவர் ஆச்சாரியாருக்கு, காங்கிரசின் அநீதிகளை ஒழிக்க வேண்டுமென்பதில் அக்கறை யிருந்தாலும், நாட்டின் தற்போதைய நிலையை உணர்ந்து பார்க்கும் தீட்சண்யத்தை அவர் இழந்துவிட்டது ஆச்சரியமாகவேயிருக்கிறது. அபார அரசியல் படைத்தவரான ஆச்சாரியார்கூட தி. மு. கழகத்தின் வளர்ச்சியை உணராதது விசித்திரமாகவேயிருக்கிறது. தி. மு. க.—சுதந்திரா கட்சிகளிடையே நடைபெற்ற தேர்தல் உடன்பாட்டுப் பேச்சுக்களில் ஆச்சாரியார் தமது பழைய பந்தாவை முன்வைத்து அளந்து பார்த்தாரேயல்லாது மக்களின் உள்ளத்தை உணர்ந்துபார்க்கும் மனோபாவத்தை இழந்துவிட்டார். ஆதலினாலேதான் அதிக எண்ணிக்கை அளவில் தமது கட்சி போட்டியிடவேண்டும் என்று அவர் வற்புறுத்தினார்.

ஆனால் அந்நிலைக்குச் சுதந்திர கட்சியின் வளர்ச்சியிருக்கிறதா என்பதைப் பற்றியோ அல்லது மக்களுடன் அக்கட்சியினர் தொடர்பு கொண்டிருக்கிறார்களா என்பதையோ ஆச்சாரியார் அவர்கள்கூட நிதானித்துப்பார்க்கத் தவறிவிட்டார்!

சுதந்திரக் கட்சியினர் விரும்பிய தொகுதிகளையெல்லாம் விட்டுக்கொடுத்திருந்தால் காங்கிரஸ் முன்னைய எண்ணிக்கையைவிட அதிகமான எண்ணிக்கையைப் பெற்றிருக்குமென்பதில் ஐயமில்லை.

சுதந்திரக்கட்சியினர் போட்டியிட்டது ஏறத்தாழ 94 இடங்கள் என்றால் 58 இடங்களில் அக்கட்சியின் அபேட்சகர்கள் ஜாமீன்தொகையை இழந்துள்ளனர். வெற்றிபெற்ற இடங்களோ ஆறுதான்! அதைவிட படுமோசம் என்னவென்றால், ஆச்சாரியார் அவர்களின் எண்ணத்திற்கும் கட்டளைக்கும் மாறாக சுதந்திரக்கட்சியின் அபேட்சகர்கள் சிலர் கடைசி நேரத்தில் காங்கிரசின் கையாட்களாக மாறிவிட்ட துரோகத்தைச் சொல்லி முடியாது! இந்த வெட்கக்கேட்டைச் சுதந்திரக் கட்சியிலுள்ள நேர்மை உள்ளம்படைத்த ஒரு சிலர் மனதார உணர்ந்துவருந்தியிருக்கிறார்கள். எனவே இக்கட்சியின் எதிர்காலம் எப்படியிருக்கும் என்பதில் ஆச்சாரியார் அவர்களுக்கே இப்போது மனக்குழப்பம் ஏற்பட்டிருப்பது நியாயந்தான்.

* தோழர். டி. டி. கிருஷ்ணமாச்சாரிக்கு விட்டுக்கொடுத்துத் துரோகம் செய்தபடலம் சுதந்திரக் கட்சியின் அபேட்சகர்கள் சிலரிடத்தில் கடைசி நேரத்தில் தலைகாட்டியது அக்கட்சிக்கே பெரும் அவக்கேடாகும். இதை யாரும் மறுக்கவோ—மறைக்கவோ முடியாது.

ஆக இத்தொல்லைகளையும் ஆளவந்தார்களின் பணபலம், அதி

(5-ம் பக்கம் பார்க்க)

மைத்துனிக்கு...!

அன்புள்ள முல்லை,

நான் இதுகாறும் கலை, இலக்கியம், சமுதாயம், அரசியல், ஆகியவைகளைப்பற்றி எழுதிய என் எண்ணங்களை நீ ஒருவாறு புரிந்து கொண்டிருப்பாய். என்னுடைய எண்ண அலைகள் எந்தெந்த நிலையில் எங்கெங்கு வரை பாய்ந்து நிற்கிறது என்றும் புரிந்து கொண்டிருப்பாய். எண்ணங்களைக் கொண்டு மனிதனை அளக்கும்போது மனிதன் பல்வேறு வகைகளாகப் பிரிந்து நிற்கின்றான். எண்ணங்களிலே பலவேறு நிலை என்றால் செயலிலும் அப்படித்தான். அப்படிப் பிரிந்து நிற்கும் பல்வேறு மனிதர்களைப் பொதுவாக ஐந்து வகையாகப் பிரிக்கலாம். ஒன்று தாம் உண்டு தம் வாழ்வு உண்டு என்று அமையும் பிரிவினர். இரண்டாம் வகையினர் தம் வாழ்வு பிறர் வாழ்வுக்கென்றே தம் வாழ்க்கையைப் பறிகொடுத்து நிற்பர். மூன்றும் வகையினர் தம் வாழ்க்கையையும் காப்பாற்றிக்கொண்டு பிறர் வாழ்க்கையையும் நிலையில் இருப்பவர் ஆவர். நான்காம் வகையினரோ பிறருக்கென்று வாழாமலும், தமக்கென்று வாழாமலும் வாழ்க்கைப் பளுவைத் தாங்க முடியாமல் உழல்பவர், ஐந்தாம் வகையினரோ தம் வாழ்க்கையைக் காப்பாற்றிக் கொள்ள பிறர் வாழ்க்கையையும் கெடுத்து தம் வாழ்க்கையையும் கெடுத்துக்கொண்டு உழல்பவராவர்.

இந்தக் கடைசி நிலையில் இருப்பவர் வாழ்வுதான் மிகவும் பயங்கரமான வாழ்வாக அமைகின்றது. அவர்களின் வாழ்வு பிறரையும் குத்தித் தானும் அழகற்றுத் தோன்றும் சப்பாத்தி முள்ளின் வாழ்க்கை போல்தான். இந்தச் சப்பாத்தி முள்ளின் வாழ்வுபோல் தான்பலர் வாழ்க்கை அமைந்துள்ளது. முள்சப்பாத்தி தன் உடலைக் காப்பாற்ற எவ்வளவு முட்களைத் தன் உடல் முழுதும் ஏற்றி வைத்திருக்கிறது. அதைப் பார்க்கவே நமக்கு அருவருப்பாகத் தோன்றுகிறதே! தன் வாழ்வுக்காக இப்படித் தன்னை காப்பாற்றிக்கொள்வதற்காக அந்தச் சப்பாத்தி பிறருக்கு அருவருப்பாகத் தோன்றும்படி இருக்கக்கூடாது தான். அது தன் வாழ்க்கையைப் பாதுகாத்துக் கொள்ளட்டும். ஆனால் அந்த வாழ்க்கை பிறர் கண்டு நகைக்கும்படியாகவா இருக்கவேண்டும், அதோடு மட்டுமா? அதைக் கண்டு அஞ்சி நடுங்குமாறு அதன் அருகே செல்லவும் முடியாதபடி அதன் தோற்றம் இருக்கும்போதுதான் முள் சப்பாத்தியின் கேவல நிலையையும், அதன் தாழ்வையும் உணருகின்றோம்.

தாம் வாழவேண்டும் என்று கொள்ளையடிப்பவர்கள், திருடுபவர்கள், ஏமாற்றுபவர்கள், உடலை விற்பவர்கள் ஆகியோரின் வாழ்க்கை இத்தகையதுதான். நல்லதொரு நாட்டில் இந்த வகையினர் இருக்கக்கூடாதுதான். அவர்கள் நாட்டிலிருந்து விலகியே முள் சப்பாத்தி போல் தான் வாழவேண்டும். அப்போதுதான் ஒரு நாடு முன்னேற முடியும். மக்கள் சமுதாயம்தானே அரசியலை வகுக்கிறது. சமுதாயம் நல்ல சமுதாயமாக இருந்தால்தானே அரசியலும் நலல அரசியலாக இருக்க முடியும். அந்த அரசியலைக் கொண்டு அமையும் நாடும் சிறந்த நாடாக ஏற்பட முடியும். எனவே ஒரு நாடு உயர்ந்து விளங்க வேண்டுமானால் அந்த நாட்டு மக்கள் உயர்ந்து விளங்கவேண்டும்.

முந்தை இருந்து நட்டோர்
கொடுப்பின்

நஞ்சும் உண்பர் நனிநாகரிகர்

என்பதற்கேற்ப நண்பர் கொடுத்த நஞ்சினையும் உண்ணும் அளவிற்கு பண்பு மிக்கவர் நல்ல நாட்டில் இருக்கவேண்டும். அதுமட்டுமன்று நாட்டு மக்கள் என்றும் நண்பர்களாக வாழவேண்டும். நண்பர்களாகச் சேர்ந்த பின்பு பகைவர்களாகப் பிரியக்கூடாது. இந்த உயர்ந்த நிலை மக்கள் சமுதாயம் ஒற்றுமையோடு வாழ உறுதுணையாகும். இதனை உணர்ந்துதான் பழம்பெரும் புலவர்,

''......பெரியோர்

நாடி நட்பின் அல்லது

நாட்டு நாடார்தம் ஒட்டியோர்
திறத்தே''

என்று பெரியவர்களின் பண்பை அறுதியிட்டுக் கூறினர்.

இவ்வாறு ஒற்றுமையுடைய சமுதாயம் அமைந்துவிட்டால் மட்டும் போதாது. ஒரு நாட்டிலுள்ள செல்வந்தர்கள் மக்களோடு ஒத்து வாழ்வதற்கேற்ற நல்ல பண்புகள் தாம் ஒரு நாட்டின் உயர்ந்த செல்வம் என்று சொல்லப்படும் செல்வந்தர்களிடம் இருக்கும் வளமான பொருட்செல்வம் நாட்டைக் காப்பாற்றாது; அதற்கு மாறாக அவர்களிடம் இருக்கும் பண்புச்செல்வம் தான் ஒரு நாட்டைக் காப்பாற்ற முடியும்.

இதை மிளை கிழான் நல்வேட்டனார் இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்பே உணர்ந்து பாடியிருக்கின்றார்.

''நெடிய மொழிதலும் கடிய ஊர்
தலும்

செல்வம் அன்று; தன் செய்வினை
பயனே;

சான்றோர் செல்வம் என்பது
சேர்ந்தோர்

புன்கண் அஞ்சும் பண்பின்

மென்கட் செல்வம் செல்வம் என்
பதுவே''

இவ்வாறு நல்லதொரு சமுதாயம் அமைந்துவிட்டால் அந்தச் சமுதாயம் அமைந்த நாடு நலமுடைய நாடாகத் திகழ்ந்து விளங்கும். அந்த நாட்டில் நல்ல அரசியலும் சிறப்புற்று ஓங்கும். ஆனால் அப்படி அமைந்த சிறப்புடைய நாடும் காலப்போக்கில் தாழ்ந்த நிலைக்கு வர ஏதுவாகும். காரணம் என்னவெனில் நாம் நாட்டில் நன்மை என்று எண்ணிச் செய்யும் செயல்களும் தீமையும் கலந்தே வரலாம். எனவே உலகில் முழுதும் நன்மையானது ஒன்று இல்லை. நன்மையாக விளைவதும் தீமையோடு கலந்தே வரும்.

'நன்றி விளைவும் தீதோடு வரும்' எனவே அவ்வப்போது நாட்டில் நல்ல செயல்களில் கலந்துவரும் தீமைகளையும் கண்டு ஒதுக்கி வருவது சாலச்சிறந்ததாகும். பயிர்கள் செழித்து வளர்வதற்கு அவ்வப்போது களை களையவேண்டிய இன்றியமையாமை இருப்பதுபோல் ஒரு நாடு முன்னேறுவதற்கு அவ்வப்போது தீமைகளை அகற்றி வருவது இன்றியமையாகும்.

தமிழோவியன்

இப்போது தேர்தல் நடந்து முடிந்துள்ள நேரம். நல்ல அரசியல் உருவாகிவிடும் என்ற புத்துணர்ச்சியுடன் இருக்கின்றோம். தமிழைக் கட்டிக்காக்கவேண்டும்என்பவர்களும், கொள்கைக்காக வாழவேண்டும் என்பவர்களும் நாட்டின் நலிவுகளைப் போக்கவேண்டும் என்பவர்களும் அந்த அரசியலில் பங்கு கொள்வார்கள் என்ற நம்பிக்கையுடன் இருக்கின்றோம். நல்லவர்களின் உள்ளத்தில் இருக்கும் நம்பிக்கை அழியாது; அது தளர்ந்தாலும் வளரும், ஆனால் தீயோரின் உள்ளத்தில் இருக்கும் நம்பிக்கையோ வளர்ச்சியடைவது போல் நிற்கும்; ஆனால் திடீரென்று தேய்ந்து போய்விடும்: அழிந்து சிதறிவிடும். எனவே நல்லதை நினைக்கும் நல்லவர்களின் நம்பிக்கை என்றுமே வெற்றி பெறாமல் போனதில்லை.

நல்ல அரசியல், நல்ல சமுதாயம் உருவாகும் என்னும் ஆவலுடன் காத்திருப்பது மட்டுமன்று; அதற்கான செயல்களைத் தொடர்ந்து செய்துகொண்டே இருப்போம். உறுதியுடன் முனைந்தால் ஒரு நாள் வெற்றி பெறுவது நிச்சயம்.

அடுத்த வாரம் நீயும் உன் அப்பாவும் வருவதாக எழுதியிருக்கின்றாய். மிக்க மகிழ்ச்சி. இங்கு வந்தால் தேர்தலுக்குப்பின் உள்ள அரசியல் நிலையைக் காணலாம். அதோடு அந்தத் திருவிழாவின் பயனையும் கண்டுகளிக்க முடியும். நானும் வெள்ளி வீதியும் உன் வருகைக்காக ஆவலுடன் காத்துக் கொண்டிருக்கின்றோம்.

அன்புமிக்க தேனருவி

[முற்றும்]

4-ம் பக்கத் தொடர்ச்சி

காரத் திமிர், எதேச்சாதிகாரக் கொடுமை ஆகியவைகளையும் எதிர்த்துத் திக்குமுக்காடச் செய்து தான் தி. மு. கழகம் மகத்தான வெற்றி பெற்றிருக்கிறது.

தி. மு. கழகத்திற்குத் துணையாயிருந்தது, ஏழை-நடுத்தர மக்களின் பேராதரவு. குருவி கூடுகட்டியதுபோல அவர்கள் தந்த பொருளுதவி! அத்துடன் சுதந்திரத் திராவிடநாட்டைப் பெறும் மகத்தான கொள்கை!

காங்கிரசுக்குப் பாதுகாப்பாக இருந்து பராக்குக் கொடுத்தது பணத்திமிங்கிலங்கள், லைசென்ஸ் பர்மிட்காரர்கள், பஸ் முதலாளிகள் பெரும் தொழிலதிபர்கள், அரசாங்க ஆதரவுபெற்றுப் பொருளைக் குவிக்கும் பேர்வழிகள், அத்துடன் அதிகாரவர்க்கத்தின் உருட்டல் மிரட்டல், பிற்போக்குக் கட்சிகளின் ஈனத்தனமான பிரச்சாரம் முதலியன!

என்றாலும் ஆளவந்தார்களின் இந்த இழிச்செயல்கள் அனைத்தையும் கழகத்தின் மகத்தான சக்தி தகர்த்தெறிந்தன !

திராவிடநாட்டுத் தனிஉரிமைக் கொள்கைக்கு நாட்டில் ஆதரவு இல்லையென்பதை நிருபித்துக் காட்டிவிடுகிறோம் என்று நாக்கைத் தொங்கவிட்டுக்கொண்டு அலைந்து திரிந்த தமிழக காங்கிரஸ் அமைச்சர்களே, அவர்களின் அடிவருடிகளே! சுதந்திர திராவிட நாட்டைப் பெறுவதே கழகத்தின் தலையாய கொள்கையென்பதைத் தேர்தல் அறிக்கையில் வலியுறுத்தியே வாக்காளர் பெருமக்களைக் கழகம் அணுகிற்று. அதற்கேற்ப வாக்காளர்களும் அவர்களின் தீர்ப்பை ''டோக்கன்'' என்ற முறையில் இத்தேர்தலில் வழங்கியுள்ளனர் !

அடுத்துவரும் பொதுத்தேர்தலுக்குள் வடநாட்டு ஏகாதிபத்தியம் வழிக்குவராவிட்டால், நேர்மைப் புத்தியுடன் நடக்காவிட்டால்அந்த ஆதிக்கத்தை அடியோடு அகற்றும் வகையில் கழகம், மக்களின் பேராதரவைப்பெற்று ஆளும் கட்சியாக அமரும் என்பது உறுதி ! உறுதி !! உறுதி !!!

எனவே, நேரு பண்டிதரே! தமிழகத்திலுள்ள சோடைபோன காமராசர் சர்க்காரின் பேச்சை நம்பி வடநாட்டுக்கும் தென்னாட்டுக்கும் இடையே பகைமையை வளர்த்துக்கொள்ள வேண்டாம். எங்கள் தாய்த்திருநாட்டின் உரிமையை வழங்குவீராக! எங்களது தூய்மையான தோழமையைப் பெறுவீராக !!

தி. மு. க.

பெற்ற வெற்றி!

(மாவட்ட வாரியாக)

மாவட்டம்	இடம்
சென்னை	4
செங்கற்பட்டு	2
வடாற்காடு	11
தென்னாற்காடு	7
சேலம்	9
திருச்சி	9
தஞ்சை	4
மதுரை	3
இராமநாதபுரம்	1
பாராளுமன்றம்	7

வாக்காளர்களின் நம்பிக்கையைப் பெற்றிருப்பது கழகம்தான் !

"மெயில்" இதழின் படப்பிடிப்பு!

——(0)——

காமராசர் தலைமையில் இயங்கும் காங்கிரஸ் கட்சி மறுபடியும் ஆட்சி பீடத்திற்கு வருகிறது.

எனினும் தனது பெரும்பான்மையில் சிறிதளவு முன்னைவிடக் குறைந்துவிட்டது.

இந்த மூன்ருவது பொதுத் தேர்தலில் குறிப்பிடத்தக்க சிறப்பு அம்சம், திராவிட முன்னேற்றக் கழகம் முக்கியமான எதிர்க்கட்சியாக மாநில சட்டமன்றத்திற்கு வந்ததுதான்.

சட்டமன்றத்தில் முன்பு 15 பேராக இருந்த அவர்கள் இப்போது 50 பேர்கள் வந்துள்ளனர்.

அவர்களது தலைவர் அண்ணுதுரை வெற்றி பெறவில்லை.

எனினும், 142 இடங்களில் போட்டியிட்ட அக்கட்சி மிக அதிகமான ஓட்டுகளைப் பெற்றிருக்கிறது.

வடநாட்டிலிருந்து பிரிவதற்கான கழகத்தின் கொள்கைக்கு ஊக்க மூட்டுவதாக இந்த வெற்றி அமைகிறது.

அடுத்து, பி. சோ. கட்சி 21 வேட்பாளர்களையுமே இழந்திருக்கிறது.

த. தே. க.வின் 9 வேட்பாளர்களும் வெற்றி பெறவில்லை.

நாம்-தமிழர் கட்சியின் தலைவர் எஸ். பி. ஆதித்தன் காங்கிரஸ்காரரால் தோற்கடிக்கப்பட்டார். லீக்கும் வெற்றி பெறவில்லை.........
சுதந்திரா 6 இடங்களைக் கைப்பற்றியது.

வாக்களிப்பு பற்றிய ஆராய்ச்சியில், 138 இடங்களைப்பிடித்த காங்கிரஸ் வாங்கிய ஓட்டுகளைப் போல் பாதிக்கு மேற்பட்ட ஓட்டுகளை 50 இடங்களில் வெற்றிபெற்ற தி. மு. கழகம் பெற்றிருக்கிறது.

எதிர்க்கட்சியின் தலைவர்களை வீழ்த்துவதில் காங்கிரஸ் ஈடுபட்டது. அதில் வெற்றியும் பெற்றது. ஆனால்...

காங்கிரசின் கோட்டை சரிந்துவிட்டதே!

தி. மு. கழகத் தலைவரின் தோல்வி காங்கிரஸ்காரர்களுக்கு வேண்டுமானல் கொஞ்சம் சுவையாக இருந்தாலும், காங்கிரஸ் கோட்டைகள் ஒன்றன்பின் ஒன்ருக எதிர்க்கட்சிகளுக்குச் சென்றது.

மாநிலச் சீரமைப்பிற்கு முன் ஒரு சக்தியாக 68 உறுப்பினர்களைக் கொண்டிருந்த கம்யூனிஸ்ட் கட்சி, 2 இடங்களை மட்டுமே இப்போது கைப்பற்றியுள்ளது.

○

உடனே தேவை

திராவிடன் இதழுக்கு கீழ்க்கண்ட ஊர்களில் முன்பணம் கட்டக்கூடிய விற்பனையாளர்கள் உடனே தேவை.

செங்கற்பட்டு	...	திருச்சி
காஞ்சிபுரம்	...	மணச்சநல்லூர்
குன்றத்தூர்	...	தொட்டியம்
மீஞ்சூர்	...	ஈரோடு
மதுராந்தகம்	...	கோவை
ஆம்பூர்	...	குன்னூர்
ஆண்டிமடம்	...	கணியூர்
ஆடுதுறை	...	பொள்ளாச்சி
மதுக்கூர்	...	வத்தலக்குண்டு
வேதாரண்யம்	...	கீழாவூரணி
நாகூர்	...	பரமக்குடி
திட்டக்குடி	...	சிவகெங்கை
திருவனந்தபுரம்	...	ராசபாளையம்

விவரங்கட்கு
நிர்வாகி: திராவிடன்
163, வால்டாக்ஸ்ரோடு, சென்னை 1

தமிழ் மக்களால் நன்மதிப்புப் பெற்ற
வெண்சங்கு சீயக்காய்த் தூள்
எங்கும் கிடைக்கும்

மனத்தில் மிருந்த
செல்வம் ராணி ஊதுபத்திகளை
உபயோகியுங்கள்

தயாரிப்பாளர் :
வெண்சங்கு சீயக்காய்த் தூள் பாக்டரி
3037—38 டபீர் குளம் ரோடு-தஞ்சை

வெற்றிப்பாதையில் நாம்!

சென்ற தேர்தலில் நாம் பெற்ற வாக்குகள்
17 லட்சம்

இந்தத் தேர்தலில் நாம் பெற்ற வாக்குகள்
34 லட்சம்

205 இடங்களில் காங்கிரஸ் பெற்ற மொத்த வாக்குகள்
46 சதவிகிதம்

142 இடங்களில் தி. மு. க. பெற்றது
28 சதவிகிதம்

சுதந்திரக்கட்சி பெற்றது 8 சதவிகிதம்

கம்யூனிஸ்ட்கட்சி பெற்றது ஏழரை-சதவிகிதம்

சுப்ரமண்யத்திற்கு மூளை கோளாறு ?

——(0)——

"திராவிடநாட்டுத் தனி உரிமைக் கொள்கையை தமிழக மக்கள் ஆதரிக்கவில்லை. தி.மு. கழகத்தினருக்குத் துணிவிருக்குமானல் பொதுத் தேர்தலில் திராவிடநாட்டுத் தனிஉரிமைக் கொள்கையை வலியுறுத்தி போட்டியிடட்டும். ஐந்துபேர் கூட வெற்றிபெற முடியாது" என்று கனம். சுப்ரமண்யம் வீம்பு பேசினுர்.

இவ்வாறு வீம்பு பேசிய தோழர் சுப்ரமண்யம் டெல்லியை நோக்கி ஓடுகிருர்! அது எப்படியோதொலையட்டும்.

கழகம் இப்பொழுத் தேர்தலில் திராவிடநாட்டுத் தனிஉரிமைக் கோரிக்கையை முன்வைத்துத் தேர்தலுக்கு நின்றது. தேர்தல் அறிக்கையில அத்திட்டம் முதலிடம் பெற்றது !

அமைச்சர் சுப்ரமண்யம் சொன்ஞர்! ஆஹா நான் வீசிய வலையில் கழகத்தினர் வீழ்ந்துவிட்டனர்! திராவிடநாட்டுப் பிரிவினையை தேர்தல் அறிக்கையில் வலியுறுத்தியிருப்பதால், வாக்காளர்கள் கழகத்தவர்களை ஐந்து பேர்கூட தேர்ந்தெடுக்கமாட்டார்கள் என்று பீத்தினுர்! பீத்தினுர்! பீத்திக்கொண்டேயிருந்தார் !

தேர்தல் முடிந்தது. 15 பேராகயிருந்த சட்டமன்ற தி. மு. கழகத்தின் பலம் 52 ஆக வளர்ந்துவிட்டது. திராவிடநாட்டுத் தனி உரிமையை ஆதரித்து வாக்காளர் பெருமக்கள் பேராதரவு தந்துள்ளனர். இந்த மாறுதலைக் கண்டு கனம். சுப்ரமண்யம் தமது போக்கைத் திருத்திக்கொள்ளவேண்டும் திராவிடத் தனிஉரிமைக் கொள்கையை எதிர்ப்பது அறிவற்ற செயல் என்ற உண்மையை உணர வேண்டும்.

ஆனல் கனம். சுப்ரமண்யத்திற்கு அவ்வித அரசியல் பண்பாடு பூஜயம் போலும்! ஆதலினுலே தான் 52 பேராக வெற்றிபெற்றுள்ள தி. மு. கழகம் தனிநாட்டுக் கோரிக்கையை கைவிட்டால்தான் மக்கள் ஆதரிப்பார்கள், சட்டத்திற்குட்பட்ட எதிர்க்கட்சியாகவும் இயங்க முடியும் என்று உபதேசம் செய்கிருர் !

சட்டம்என்பது மக்களின் நியாயமான உணர்வை மதிக்கக்கூடியதாயிருக்கவேண்டும். இல்லையெனில் அது எப்பேர்ப்பட்ட சட்டமாயினும் மக்களின் மகத்தான சக்தியினுல் தகர்த்தெறியப்படும் என்பதை கனம். சுப்ரமண்யம் உணராதது வருந்தத்தக்கது. அடுத்தபடியாக திராவிடநாட்டுத் தனி உரிமையை ஆதரிக்கும் வகையில்தான் கழகத்திற்கு அதிக வெற்றிகளையும் ஏகஇந்திய கொள்கையை பேசும் காங்கிரசின் பலத்தைக் குறைத்தும் வாக்காளர்கள் தீர்ப்பு வழங்கியுள்ளனர்.

இந்த மகத்தான தீர்ப்புக்குப் பிறகும் திராவிடநாட்டுத் தனி உரிமையை விட்டுவிடுங்கள் என்று கழகத்தினருக்கு கனம். சுப்ரமண் உபதேசம் செய்கிருரென்ருல் அவரது மூளையில் ஏதாவது கோளாறு ஏற்பட்டிருக்க வேண்டுமென்றே ஐயுறுகிருேம்! அந்தோ பரிதாபம்!! அவருக்கு நம் அனுதாபம்!!!

★

வாசகர்களுக்கு

தேர்தல் அலுவல்களின் காரணமாக சென்ற வார இதழ் (24—2—62) வெளிவராமல் தடைபட்டுவிட்டது. இனி வழக்கம்போல் வாரந்தோறும் 'திராவிடன்' இதழ் வெளிவரும் என்பதை வாசகர்களுக்கு தெரிவித்துக்கொள்கிருேம். வணக்கம்.

—நிர்வாகி: 'திராவிடன்'

நான்கு கோடிப் பாடல்கள்!

○

தென்னகத்தின் முடிமன்னர் மூவேந்தர்களில், தமிழை வளர்ப்பதிலும், தமிழின் உயிராய் விளங்குகின்ற புலவர் பெருமக்களைப் போற்றிப் பேணுவதிலும் பாண்டி மண்டலம் முதலிடம் பெற்றிருந்தாலும், சேழ சேரரும் இதற்குச் சளைத்தவர்களல்லர்!

ஒரு சமயம் சோழன் தன் அவைப் புலவர்களைச் சோதிக்க எண்ணி, புலவர்களை ஒன்றுகூட கட்டளையிட்டான்!

தமிழ் வளர்க்கும் புலவர்களும் தார்வேந்தன் ஆணை கேட்டு அவையில் கூடினர்; "அரசனின் அடுத்த கட்டளை எதுவோ", என்று சிந்தித்தவாறே!

எதிர்பார்த்த மன்னனும் எதிரே வர, அவைநடுவே அழகிய அணங்கொருவள் வந்தாள். அவள்மீது அவையோரின் கண்கள் எவ்விதம் மொய்க்குமோ அவ்விதமாய் மொய்த்தன; புலவர்களின் கண்கள் புரவலின் பால்!

புலவர்களைக் கண்டு களிப்புற்ற காவலன் "தமிழ்ப் பேரறிஞர்! உம்மில் புலமையில் வல்லவரைக் காண விழைகின்றேன் நான்! எனவே, உங்களுக்குள் தேர்வு ஒன்று நடத்த இருக்கின்றேன். அதைக் கூறவே நான் இப்போது உங்களனைவரையும் அழைத்தது. அதாவது, ஒரு பகல்—ஓர் இரவு முடிவதற்குள் நான்கு கோடி பாடல்களைப் புனையவேண்டும்! இதை யார் புனைந்துக் காட்டுகிறார்களோ அவர்களே புலமையிலும் புலமைப்பெற்றோர். நாளைக்குக்காலை ஆரம்பமாகும் நமது போட்டி! மறுநாள் காலை முடியும்!" என்று கூறிவிட்டு அவையை விட்டகன்றான் அரசன்!

இடிபோன்ற இச்செய்தியைக் கேட்டதும் புலவர் பெருமக்களின் முகத்தில் ஈயாடவில்லை! வைத்த கண் வாங்காமல் காவலன் சென்ற திக்கையே நோக்கிக்கிடந்தனர். சிறிது நேரஞ்சென்ற பின்னரே சுயவுணர்வு பெற்றவர்களானார்கள்!

" 'இம்'மென்னு முன்னே இருநூறும் முன்னூறும், 'அம்'மென்ருல் அறுநூறும் எழுநூறுமாகப் பாட்டெழுதுவோம்" என்றுதான் நாம் பிறரிடம் பெருமைக்குச் சொல்லிக்கொள்வது வழக்கம்! ஆனால், இன்றோ அரசன் அல்லொன்று பகலொன்று என்று அறுதியிட்டு வரையறுத்துவிட்டு, நான்கு கோடி பாடல்கள் வேண்டுமென்ருல், என்ன நாம் செய்வது? எவ்விதந்தான் இயற்றுவது? 'பா'ப் புனையும் பணி என்றால் பார்த்துச் செய்வதென்ரு பொருள்? சிந்தனை வேலை செய்ய—கருத்துக்கள் நடமாடி—சிதறித் தெளிப்பதல்லவோ சித்திரக் கவிதை!

எதையெண்ணி கொற்றவன் இக்கட்டளையைப் பிறப்பித்தான்?" என்றெல்லாம் ஒருவரோடொருவர் உள்ளங்குலுங்க உரையாடிக்கொண்டிருந்துவிட்டு, இதைப் பற்றிச் சிந்தித்து அவரவர்களுக்குத் தோன்றும் முடிவை மறுநாள் பரிமாறிக்கொள்ள ஓர் பொதுவிடத்தைக் குறிப்பிட்டுக்கொண்டு புறப்பட்டனர் அந்தக் கவிதாமணிகள்!

தமிழ் வளர்க்க இரவைப் பயன்படுத்திவந்த பாவாணர்கள், அன்றிரவு நான்கு கோடி பாடல்களை எப்படிப் புனைவது என்பதிலேயே சிந்தனையை ஓடவிட்டிருந்தனர்.

காலமென்ன கட்டிவைத்த குதிரையா; இருந்த இடத்திலேயே இருக்க? அது வண்டியில் பூட்டிய குதிரையைப்போல் ஓடிக்கொண்டே இருந்தது!

பொற்கோழி கூவி ஒளிக்கதிரும் உதயமாகியது! குறிப்பிட்ட இடத்தில் புலவர்கள் ஒன்று கூடினர். ஆனால், அரச கட்டளையை முடிக்க எவருக்கும் துணிவில்லாமலேயே கூடினர்! மேலும் அதற்கு எவ்விதத்திலும் முடிவுகாண முடியா

லோகிதாசன்

மல் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொண்டிருந்த சமயம், பல ஊர்களைச் சுற்றிவிட்டு அவ்வழியே வந்துக்கொண்டிருந்த ஔவையைக் கண்ட புலவர்கள் தங்களின் மேல் விழுந்த பாரம் தீங்கியதாகக் கருதி, ஔவையை அணுகி நடந்ததைக் கூறி நடக்க வேண்டியவற்றிற்கு வழி கேட்டு நின்றனர்!

ஔவை புலவர்களிடமிருந்து அறிந்த செய்தியைக் கேட்டு திகைத்தாலும், பின்னர் சமாளித்துக்கொண்டு, 'அன்பர்களே! இது போன்ற சிக்கலான பிரச்சினைகளுக்கெல்லாம் நாம் சாதுர்யத்தைத்தான் பயன்படுத்த வேண்டும். நடக்க முடியாத காரியத்தை நம் மீது திணிக்கும்போது நம் எழுத்தின் திறமை கொண்டே அதற்கு பதிலளிக்க வேண்டும்! இதோ பாடுகிறேன் கேளுங்கள் நான்கு கோடி பாடல்கள்!" என்று ஔவை பாடத் துவங்க, ஏனையப் புலவர்கள் மூதாட்டியின் வாயினின்று உதிரும் மூதுரையையே கவனிக்கலாயினர்.

மதியாதார் முற்ற மதித்தொருகாற் சென்று
மிதியாமை கோடி பெறும்!
உண்ணீ ருண்ணீரென் றுபசரியார் தம்மனையில்
உண்ணாமை கோடி பெறும்!
கோடி கொடுத்துங் குடிபிறந்தார் தம்மோடு
கூடுதல் கோடி பெறும்!
கோடானு கோடி கொடுப்பினுந் தன்னுடைய நாக்
கோடாமை கோடி பெறும்!

ஔவையின் இப்பாடலைக் கேட்ட புலவர்கள் பாலைவனத்தில் நீரைக் கண்டவர்கள் போல் மகிழ்ந்தனர். கோடி பெறும் இப்பாடல் மன்னனுக்குத் தெரிந்தது — பாடியவர் ஔவை என்பதையும் அறிந்தான் —அகமகிழ்ந்தான்—ஆனந்தக்கூத்தாடினான்!

புலவர் ஓங்க—தமிழ் ஓங்கும்! புலவர் சிறக்க—தமிழ் சிறக்கும்! என்று அனைவரையும் போற்றிப் பொன்னும் பொருளும் பூரிப்போடு வழங்கினான் புலவர்கட்கு, புலிக்கொடியோன் சோழன்!

பேசின்பிரிட்ஜ் தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கு பணிவன்பான நன்றி

——(0)——

சென்னை பேசின்பிரிட்ஜ் தொகுதியில் கழக வேட்பாளனாக நின்ற எனக்காகவும், கழகத்திற்காகவும் வெற்றியைத் தேடித்தரவேண்டுமென்று பெருமிதத்தோடு வாக்களித்த வாக்காளப் பெருமக்களுக்கு குறிப்பாக தாழ்த்தப்பட்ட சமுதாய வாக்காளப் பெருமக்களுக்கு, (குறைந்த வாக்கு வித்திசாயத்தில் வெற்றிக்கான வாய்ப்பை இழந்த நான்) எனது பணிவன்பான நன்றியறிதலையும் வணக்கத்தையும் தெரிவித்துக்கொள்கிறேன்

அது போன்றே கழகம் வெற்றியடைய வேண்டும் என்ற பேரார்வத்தின் காரணமாக அயராது பணியாற்றிய பகுதிச்செயலாளர் உள்ளிட்ட நிர்வாகிகள். வட்டச்செயலாளர்கள் செயற்குழுவினர், சார்புமன்றங்கள், தி. மா. மு. க. மாணவத் தோழர்கள், தாய்மார்கள் மற்ற நிறுவனங்கள், தி. மு. க. சார்புடைய தொழிற்சங்கங்கள், மாவட்டக்கழக நிர்வாகிகள், 2000 தொண்டர்கள், தனிப்பட்ட நண்பர்கள் ஆகிய அனைவருக்கும் நான் என்றும் கடமைப்பட்டவனாவேன்.

இவ்வளவு ஆதரவுயிருந்தும், கழகம் வெற்றியுருததற்குக் காரணம் காங்கிரசின் பணபலம், அதிகார வர்க்கத்தின் ஜபர்தஸ்த்துக்கள், அதிலும் முதலமைச்சர் காமராசரே ஜனநாயக முறைக்கு மாறுபட்ட செயலை மேற்கொண்ட அநீதி ஆகியவைகள்தான் என்பதை பேசின் பிரிட்ஜ் தொகுதிப் பொதுமக்கள் நன்கு அறிந்ததாகும். எனவே காங்கிரசுக்கு வெற்றி என்பது முறைகெட்ட ஒழுங்கற்ற வகையில் பெற்றதாகும். ஆதலின் கழகத்திற்கு வழங்கப்பட்ட ஒவ்வொருவாக்கும் தூய்மையும் சக்தியும் படைத்ததாகும் என்பதை உணர்ந்து நமது பணியில் தலைநிமிர்ந்து தொடர்ந்து ஈடுபடுவோமாக!

கழகம் வெற்றியுற இயலாததற்கு மற்றுமொரு காரணம், இத்தொகுதியில் உள்ள ஏறத்தாழ எட்டாயிரம் வடநாட்டுக்காரர்களான வாக்காளர்கள் தங்களின் ஆதிக்கம் நீடிக்கவேண்டும் என்ற நப்பாசையால் கழகத்திற்கு ஆதரவளிக்கவில்லை. எனவே அந்த வடநாட்டுக்காரர்களை ஒதுக்கிவைத்துப் பார்த்து, (அதிலும் ஆளவந்தார் செய்த அட்டூழியத்தை துச்சமென மதித்து) திராவிடப் பெருங்குடி மக்கள் கழகத்திற்கு வழங்கிய பெருவாரியான வாக்குகளையும் ஆதரவையும் கண்டு நாம் ஆறுதல் கொள்வோமாக!

கழக வேட்பாளனாக நின்ற நான் வெற்றி பெறவில்லையென்பதை அறிந்த பொது மக்களும், வாக்காளர் பெருமக்களும் வேதனையுடன் இருப்பதை நான் அறிவேன். என்ருலும் நமது கழகம் சட்டமன்றத்தில் 52 இடங்களையும், பாராளுமன்றத்தில் 7 இடங்களையும் வெற்றி பெற்றிருப்பதை எண்ணி பெருமைப்படுவோமாக! நமது பணி வீணாகவில்லை என்பதை உலகறியச் செய்வோமாக!

அதுமட்டுமல்லாமல், நமது மதிப்பிற்குரிய தலைவர் அண்ணா அவர்கள் எடுத்துக்காட்டியுள்ளதைப்போன்று விட்ட இடத்திலிருந்து உற்சாகத்துடன் பணி புரியுங்கள். வடவரின் வெறிபிடித்த நப்பாசை, ஆளவந்தாரின் அநீதி, காங்கிரசின் பாசிஸப்போக்கு ஆகிய தீய சக்திகளை எதிர்காலத்தில் எவ்வகையிலும் முறியடிப்போம் என்ற தளராத உறுதியுடன், தூய்மையான தோழமையுடன் செம்மையாக வழிவகுத்து நின்று செயலாற்ற முற்படுமாறு கழகத் தோழர்கள் ஒவ்வொருவரையும் வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

இத்தேர்தலில் கழகத்திற்கு பெருமிதமான ஆதரவளித்த தாய்மார்களுக்கும், தேர்தல் உடன்பாட்டை இனிதே நிறைவேற்றிய முஸ்லீம் லீகிற்கும், குடியரசு கட்சிக்கும் என் சார்பிலும், கழக சார்பிலும் உளங்கனிந்த நன்றியறிதலை மீண்டும் தெரிவித்துக் கொள்கிறேன்.

வீழ்க வடநாட்டு ஏகாதிபத்தியம். வெல்க சுதந்திரத் திராவிடம்!

○

தங்கள் நன்றி மறவா

என். வி. நடராசன்

ஏஜெண்டுத் தோழர்களுக்கு

•

வணக்கம். பிப்ரவரி முடிய பட்டியல் அனுப்பட்டிருக்கிறது. அதற்கான தொகையை உடன் தவருது அனுப்பிவைத்தால்தான் மேற்கொண்டு பத்திரிகை அனுப்ப இயலும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

— நிர்வாகி, திராவிடன்

பதிவு எண்: 7178 திராவிடன் தொலைபேசி 33581

8/

எதையுந்தாங்கும் இதயம் வேண்டும்!

என்னைத் தோற்கடிக்க முடிந்ததே தவிர கழகத்தின் வளர்ச்சியை அசைக்க முடியவில்லை!

அதை எண்ணி மகிழ்ச்சியடையுங்கள்! மனச்சோர்வின்றி தொடர்ந்து தீவிர பணியாற்றுங்கள்!

அறிஞர் அண்ணா தரும் ஆறுதல் செய்தி!

ஆளும் கட்சியினர் கையாண்ட முறைகள் வீசிய கருவிகள் எத்துணை மோசமானவைகள் என்பதைக் காட்டி, 'இத்தோல்வி என் தோல்வி அல்ல' என்று வாதாட நான் முற்படவில்லை; நானே அந்த வாதத்தைச் சரியானது என்று கொள்ளவில்லை.

அச்சம், ஆபாசம் ஆகியவைகளால் அலைக்கழிக்கப்படாத உள்ளம், குடியாட்சியில் உள்ள மக்களுக்கு வேண்டும்.

என் தோல்வி, அப்படிப்பட்ட மக்களின் தொகை குறைவு என்பதைக் காட்டுகிறது.

குடியாட்சி மாண்புடன் இருக்க வேண்டுமானால், அச்சம் தயை தாட்சண்யத்துக்காகக் கொள்கை இழந்திடாத பண்பு மக்களிடம் மிகுந்திருக்க வேண்டும்; இன்று நிலைமை அவ்விதம் இல்லை.

நாம்தான் அந்தப் பண்பு வளர்ந்திடச் செய்யவேண்டும். என் தோல்வி காட்டும் பாடம் அதுதான்!

என்பால் மாறா அன்பும் கழகத்திடம் தளராத பற்றும் கொண்டுள்ள தோழர்களே! என் தோல்வி கேட்டும், அதுபோன்றே அதிர்ச்சி தரத்தக்க வேறு சிலரின் தோல்வி பற்றிய செய்தி கேட்டும், எந்த நிலையில் நீங்கள் இருக்கிறீர்கள் என்பதை அறிகிறேன்.

உள்ளம் உடைய இடம் கொடுக்கக்கூடாது.

கண்ணீரைத் துடைத்துக் கொண்டு கழகக் காரியமாற்றப் புறப்படுங்கள்!

பெருமூச்செறிவதை நிறுத்திக் கொண்டு, முன்னிலும் அதிக ஆர்வம் காட்டிப் பணிபுரியுங்கள்!

இந்தத் தேர்தலில் என்னைத் தோற்கடிக்க ஆளும் கட்சியினரும் அவர்தம் ஆதரவாளர்களும் என்னென்ன முன்னேற்பாடுகள் செய்தனர்—முறைகளைக் கையாண்டனர்—கருவிகளைப் பயன்படுத்தினர் என்பது நாடறிந்த உண்மையாகும்.

என் தோல்விதான் அவர்களுக்கு இன்னும் சில காலத்துக்கு ஆதிக்கம் செலுத்தும் வாய்ப்பு அளிக்கும் என்று கணக்குப் போட்டுக் கொண்டு, திட்டமிட்டுப் பணியாற்றினார்கள்—வெற்றி பெற்றார்கள்; அதிலே அவர்கள் பெருமைப்படலாம்; புதிய நம்பிக்கைகூட ஏற்படக்கூடும்.

ஆனால், அவர்களின் கணக்கு தவறு; என் தோல்வியுடன் கழகம் கலைந்தது என்று எண்ணுகிறார்களே—அதுதான் அவர்கள் தவறான கணக்கு!

நான் சட்டசபையிலிருந்து கொண்டு பணியாற்றுவதைத் தடுக்க மட்டுமே இந்தத் தோல்வி பயன்படும்!

என்னைத்தானே தவிர, கழகத்தை அல்ல! கழகத் தோழர்கள் என் தோல்வியால் மனம் வேதனைப்பட்ட நிலையில் உள்ளனர் என்றாலும், என்னால் ஆறுதல் அளிக்கப்பட்டு, சட்டசபை செல்கிறார்கள்; செம்மையாகச் செயலாற்றுவார்கள்.

அவர்களின் எண்ணத்திலும் பேச்சிலும் நான் இருக்கிறேன்; எனவே பெரியதோர் நஷ்டம் கழகத்துக்கு ஏற்பட்டு விடவில்லை.

ஆண்டுக்கு நூறு நாட்கள் கூடிடும் சட்டசபையில் நான் இடம் பெற முடியாதபடி செய்துவிட்டனர்; என்றாலும், ஒவ்வொரு நாளும் நான் உங்களைச் சந்திக்கும் இடம்—சட்டசபைகளை உருவாக்கும் பேரவை—அங்கு எனக்குள்ள அலுவல்—ஆகியவைகள் இவர்களால் தடுக்கப்பட முடியாது!

இந்தத் தோல்வியும் என்னை அந்தப் பணியிலிருந்து விலகச் செய்துவிடாது; மாறாக, அந்தப் பணி மேலும் மும்முரமாக நடைபெறும்!

மக்களை மிரட்டியும், மயக்கியும் வாக்குகள் பறிக்கப்பட்டது—உண்மை! பணம் தாராளமாகப் படை எடுத்தது—உண்மை!

நான் காஞ்சிபுரத்தில் பேசியுள்ளபடி, 'என்னுடன் வெங்கடேசப் பெருமாள்' போட்டிப்போட முன்வந்துவிட்டார்!

ஆனாலும், அந்த நிலைமையையும் மீற வெற்றி கிடைத்தால்தான் உண்மையான வெற்றியாகும்.

எந்தக் கருத்தைக் கொண்டோ எதற்கு வயப்பட்டோ என் தொகுதி மக்கள் என்னை ஆதரிக்க மறந்துவிட்டார்கள்; என்றாலும், மீண்டும் அவர்களின் நல்லெண்ணத்தையும், ஆதரவையும் பெறுவதற்கே நான் பணியாற்றிவர இருக்கிறேன்.

எதையும் தாங்கும் இதயம் வேண்டும் என்பதனை இந்த நேரத்திலும் நினைவுபடுத்துகிறேன்.

என்னைத் தோற்கடிக்க வேண்டும் என்பதுடன், ஆளும் கட்சியினருக்கு, என்னுடன் சட்டமன்றத்தில் பணியாற்றியவர்களை வீழ்த்திவிட வேண்டும் என்பதுதான் திட்டம்!

அதன்படியே சட்டமன்றத்தில் அரும்பணியாற்றிய நமது தோழர்கள் பலரைத் தோற்கடித்து விட்டார்கள்.

எனினும், அதிக எண்ணிக்கையுடன், அரும்பணியாற்றக் கூடிய அறிவாற்றல் படைத்த நமது கழகத் தோழர்கள் சட்டமன்றம் செல்கிறார்கள்.

எனவே, என் தோல்வி காரணமாகத் தி. மு. கழக சட்டமன்றப் பணி குந்தகப்பட்டு விடாது—குறைந்துபோகாது!

பல இடங்களிலே நமக்குக் கிடைத்த வெற்றியால் ஏற்படக் கூடிய களிப்புணர்ச்சியை என் தோல்வி மூட்டிவிட்ட கசப்புணர்ச்சி பாழாக்குவதை உணருகிறேன்.

எனவேதான், வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன். நேரிட்டுவிட்ட தோல்வியை மறந்துவிடுங்கள்!

கண்கலங்கி நிற்காதீர்கள்!

வெற்றி பெற்று வருகிறது கழகம்!

நாட்டு மக்களின் பேராதரவு வளர்ந்து வருகிறது!

இது சாதாரணமானதல்ல—அரசியல் முக்கியத்துவம் வாய்ந்தது!

இதை எண்ணி மகிழ்ச்சி அடையுங்கள் — பெருமைப்படுங்கள் — புதிய உற்சாகத்துடன் பணியாற்றுங்கள்.

○

தேர்தல் முடிந்தது!

வடநாட்டு ஏகாதிபத்திய சர்க்கார் நம் தாயகத்துக்கு தர்மகர்த்தர்களாக யிருத்தல் வேண்டும்; அதுதான் இந்திய தேசிய ஒற்றுமை; அதற்கு மாறுபட்ட கொள்கைகொண்ட தி. மு. கழகம் தேசத் துரோகமானது என்று ஓலமிட்ட கட்சிகளுக்கு பொதுத்தேர்தலின் முடிவைக் கண்ட பிறகாவது தெளிவு பிறக்குமா? அல்லது "தொட்டில் பழக்கம் சுடுகாடு மட்டும்" என்பார்களே அதுபோல அக்கட்சிகள் ஆசாபாசங்களுக்கு அடிமைப்பட்டுச் சீரழியப் போகின்றனவா? அல்லது

தெளிவு பிறக்குமா?

ஆசிரியர், வெளியிடுபவர்: என். வி. நடராசன், அச்சிடுபவர், சோழு அச்சகம், 163, வால்டாக்ஸ் ரோடு, சென்னை-1